மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.132/2022

வாக்குமூலம். வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சித்ரா | ஜாதி | |
| க/பெ. | செல்லத்துரை | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 51 /2023 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 10.01.2024-ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

வாதி மற்றும் பிரதிவாதிகளின் வம்ச வழிப்பட்டியல் அசல் தாக்கல் செய்கிறேன் மேற்படி ஆவணம் பிரதிவாதி தரப்பில் கருப்பையாவின் அனைத்து வாரிசுகளையும் வழக்கில் சேர்க்கவில்லை என்றும் இதர வாரிசுகளைப் பற்றி மறைத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 31.12.2020 ம் தேதி 1ம் பிரதிவாதி 3 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவு இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் கணினி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது வாதியின் பிறப்பு சான்றிதழ் நகல் தாக்கல் செய்கிறேன் அது அசலுடன் ஒப்பிடப்பட்டு வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதியின் கல்லூரி மாற்றுச்சான்றிதழ் நகல் தாக்கல் செய்கிறேன் அது அசலுடன் ஒப்பிடப்பட்டு வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதியின் கடவுச்சீட்டு முதல் பக்கம் நகல் தாக்கல் செய்கிறேன் அது அசலுடன் ஒப்பிடப்பட்டு வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதியின் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன் அது அசலுடன் ஒப்பிடப்பட்டு வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதியின் குடும்ப அட்டை நகல் தாக்கல் செய்கிறேன் அது அசலுடன் ஒப்பிடப்பட்டு வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.02.2021 ம் தேதி வாதி பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலாக ஒப்புதல்

அட்டை எண்ணிக்கை 4 தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ.9 வரிசை எண்ணிக்கை 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.02.2021ம் தேதி பிரதிவாதிகள் அனுப்பிய பதில் அறிவிப்பு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 31.01.2013 தேதிய பதிவு பாகப்பிரிவினை பத்திரம் இணைய தள பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.